2011 ஜூன் 6] [பேரவைத் தலைவர்]

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

மாண்புமிகு திரு. என். மரியம்பிச்சை, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு திரு என். மரியம்பிச்சை, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்.*

"திருச்சி மாவட்டம், திருச்சி மேற்கு தொகுதியிலிருந்து பதினான்காவது தமிழக சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சுற்றுச்சூழல் துறை அமைச்சராகப் பதவியேற்ற திரு. என். மரியம்பிச்சை அவர்கள் 23-5-2011 அன்று எதிர்பாராதவிதமாக சாலை விபத்தில் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

முற்பகல் 10-05

மறைந்த திரு. என். மரியம்பிச்சை அவர்கள் சாதாரண தொண்டனாக இருந்து பல்வேறு பொறுப்புகள் வகித்தவர். கட்சித் தலைமையின்மீது அன்பும் விசுவாசமும் கொண்டு ஆரம்ப காலம் முதல் கட்சிப் பணிகளில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு திறம்படப் பணியாற்றியுள்ளார். பொது வாழ்வில் அடக்கமுடன் சீரிய முறையில் பணியாற்றிய இவர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்ற உறுப்பினராக மூன்று முறை செவ்வனே பணியாற்றி, அனைவரிடத்திலும் நட்புறவோடு பழகி அனைத்துத் தரப்பினரின் பாராட்டையும் பெற்றவர். ஆற்றல் படைத்த, துடிப்பு மிக்க, செயல் வீரராகப் பணியாற்றி வந்த இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது."

[பேரவைத் தலைவர்] [2011 ஜூன் 6

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும்முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை தெரிவிக்கும்வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை *(7-6-2011)* செவ்வாய்க்கிழமை காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

—